மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: வெகு விரைவில் மதுரை மக்கள் அந்தக் கனியை ஆகஸ்டு அல்லது செப்டம்பர் மாதத்திற்குள் அனுபவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 10, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

10—

பால் குளிரூட்டும் நிலையங்கள்

***107308—திரு. பெ. மோகன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம், கயத்தார், கழுகுமலை மற்றும் புதியம்புத்தூர் ஆகிய கிராமங்களில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள ஒட்டப்பிடாரம், கயத்தார், கழுகுமலை மற்றும் புதியம்புத்தூர் ஆகிய கிராமங்களில் போதிய பால் உற்பத்தி இல்லாததால், தற்போது பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன்.

திரு. பெ. மோகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய ஒட்டப்பிடாரம் தொகுதி மிகவும் வறட்சியான தொகுதி. வேறு எதுவும் தொழில் இல்லை. இங்குள்ள மக்கள் விவசாயத்தை மட்டுமே நம்பி வாழ்கின்றனர். விவசாயப் பணிகள் முடிந்தவுடன் வேறு வேலை இல்லாமல் சும்மாதான் இருக்கிறார்கள். ஆகவே பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைகின்றபோது விவசாயத்தை நம்பி வாழ்கின்ற மக்கள் பசுக்களை வளர்த்து பால் உற்பத்தியை உயர்த்துவதற்கு ஏதுவாக

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இருக்கும். ஆகவே, இங்குள்ள பகுதியில் பால் குளிரூட்டும் நிலையங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தப் பகுதியில் பால் உற்பத்தி குறைவாக இருக்கிறது. பால் குளிரூட்டும் நிலையம் அமைத்த பிறகு அங்கு பால் உற்பத்தி பெருகும் என்று சொல்கிறார். ஆனால், மாண்புமிகு தமிழகத்தினுடைய முதல்வர் தலைவர் கலைஞருடைய ஆட்சிக் காலத்தில் அரசின் மூலமாக 22 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து, கறவை மாடுகளை வாங்கிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறோம். அந்த வகையிலே மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அந்தப் பகுதியிலே கறவை மாடுகளை அதிகமாக வழங்கி பால் உற்பத்தியைப் பெருக்கி, அதன் பிறகு குளிரூட்டும் நிலையம் அமைக்கப்படும் என்பதையும் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சேகர்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பட்டனை சரியாக அழுத்தாவிட்டாலும்கூட, பட்டனை சரியாக அழுத்தி, இன்று புதிய உறுப்பினராக வந்திருப்பவருக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், எங்கே பட்டனை சரியாக அழுத்த வேண்டுமோ அங்கே சரியாக அழுத்தி விட்டார்கள், மக்கள். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) ஏன் ? ஏன் ? (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைதியாக இருங்கள், (குறுக்கீடுகள்) திரு. எஸ்.வி. சேகர், நீங்கள் கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

திரு. எஸ்.வி. சேகர்: மக்களுடைய கோரிக்கைகள் இந்தச் சட்டமன்றத்தில் எதிரொலிக்க வேண்டும் என்ற காரணத்தினால்

சொல்கிறேன். இன்று சென்னையில் பல இடங்களில் ஆவின் பால் குறிப்பிட்ட விலையைவிட ஒரு ரூபாய் அதிகமாக விற்கப்படுகிறது. அதைக் கேட்கும்போது கடைக்காரர். . . (குறுக்கீடுகள்) கை இங்கு இல்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Please, எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) சொல்லியாகிவிட்டது. நான் அவரிடம் சொல்லிவிட்டேன் அல்லவா! திரு. எஸ்.வி. சேகர், கேள்வியை மாத்திரம் கேளுங்கள். (குறுக்கீடுகள்)

திரு. எஸ்.வி. சேகர்: Mike Volume-ஐ ஏற்றுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முடிந்துவிட்டது, அவர் கேள்வி கேட்கட்டும். அவருக்கு டைம் கொடுத்தாகிவிட்டது அல்லவா! (குறுக்கீடுகள்) திரு. எஸ்.வி. சேகர், கேள்வியை மாத்திரம் கேளுங்கள்.

திரு. எஸ்.வி. சேகர்: நான் பேசிக்கொண்டுதான் இருக்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னையில் பல இடங்களில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Mike-ஐ பிடிக்காமல் தள்ளி நின்று பேசுங்கள்.

திரு. எஸ்.வி. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று சென்னையில் பல இடங்களில் ஆவின் பால் M.R.P. விலையைவிட ஒரு ரூபாய் அதிகமாக விற்கப்படுகிறது. அதற்கு நம்முடைய அரசு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்து, எந்த விலை குறிப்பிடப்பட்டிருக்கிறதோ, அந்த விலையில் விற்க ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய அந்தக் குற்றச்சாட்டினை, எந்த இடத்தில், யார். . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி.வி. சண்முகம், அமைதியாக இருங்கள், (குறுக்கீடுகள்) திரு. செ.ம. வேலுசாமி, நான் யாருக்குக் கேள்வி கேட்க அனுமதி கொடுக்க வேண்டும் என்பது எனக்குத்

2010 ஏப்ரல் 5]

தெரியும். அமைதியாக இருங்கள். மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தக் குறைபாட்டினை, எந்த இடத்தில், எங்கே என்று குறிப்பிடுவார்களேயானால், அவர்கள்மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு** : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்கு சிறப்புக் கவன ஈர்ப்பாக... (குறுக்கீடுகள்) முதலில் நான் சொல்வதை எல்லோரும் கேட்டுக்கொள்ளுங்கள். (குறுக்கீடுகள்) நான் சொல்வதைக் கேளுங்கள். தமிழகம் முழுவதும் போலியான மற்றும் காலாவதியான மருந்து விற்பனை செய்தது கண்டுபிடிக்கப்பட்டதால் நோயாளிகள் மற்றும் பொது மக்களிடம் ஏற்பட்டுள்ள நிலை குறித்து சிறப்புக் கவன ஈர்ப்பாக நான் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அதன்மீது... (குறுக்கீடுகள்) நான் சொல்கிறேன். இதைத்தான் எடுப்பதற்கு... (குறுக்கீடுகள்) இதுசம்பந்தமாக நீங்களும் அறிவிப்பு

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS